உ

கடவுள் துணை.

மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்த

திருஞானத்தா[illegible]

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILUR
A. No. 35403

சென்னை, மண்ணடி,
பூ. ரா. அப்பாதுரை முதலியார்
அவர்களது
சரவணபவ அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

உ

கடவுள் துணை.

மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்த

திருஞானத்தாழிசை.

சென்னை, மண்ணடி,

பூ.ரா. அப்பாதுரை முதலியாரவர்களது

சரவணபவ அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

1927.

அநுமந்த பராக்கிரமம்.

இது ஸ்ரீ ஆஞ்சனேயரியற்றிய அதிசயமான பராக்கிரமங்களை சத்திய பத்தியரூபமாக வேதாகம புராணேதிகாசாதி அரிய பெரிய உதாரணங்களுடன் விளக்கமாக எழுதப்பெற்றது அன்றியும் ஆஞ்சனேயர் மந்திரம், ஆஞ்சனேயர் யந்திரம், ஆஞ்சனேயர் பூஜாவிதான முதலிய உபாஸனுக்கிரகங்களை மலையாளம், இந்துஸ்தான் முதலிய தேசம் வரையிலும் மந்திரம், மஹோத்தி பிரபஞ்சகாரம் சாஸ்திர திலக முதலிய மந்திர சாஸ்திர ஆதாரத்துடன் அனைவருக்கும் பயன்படும் வண்ணம் அழகிய 41 படங்களுடன் கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 1 8 0

குணங்குடி மஸ்தான் சாகிபு பாடிய திருப்பாடற்றிரட்டு,

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்தில் அச்சிட்டு மஸ்தான் அவர்கள் திருவுருவப்படமும் அமைக்கப்பெற்று நேர்த்தியான கலிகோபயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது.

இதன் விலை அணா 0 14 0

எமது விலாசம்:—சிவநேசன் அண்டு கோ.,
35. பாரிஸ் வெங்கடாசல அய்யர் தெருவு,
மண்ணடி போஸ்டு, சென்னை.

உ

கடவுள் துணை.

மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்த

திருஞானத்தாழிசை.

கழியாகிய முனைகண்ட பின்னுற்று றுறவற்றாய்
சூதும்பல பொய்பேசிய தொழிலும் பிறக்கிட்டாய்
வழியாகிய துறைகண்டபின் னநுட்டானமு மற்றாய்
வழங்கும்பல நூல் கற்றிடு நினைவும் பிறக்கிட்டாய்
விழியாகிய மலர்கண்ட பின்னுப ரார்ச்சனையற்றாய்
மெய்க்கீறிடு திருமந்திரம் விட்டாய் சிவமுற்றாய்
அழியாப்பதி குடியேறிமுன் னச்சம்பல வற்றாய்
யாரொப்பவர் நினையுற்றவ ரலைவற் றிருமனமே. (1)

நெஞ்சிற் பொருளடிகண்ட பின்னெஞ்சிற் பகையற்றாய்
நேசத்தொடு பார்மங்கையர் மேலும் நினைவற்றாய்
மிஞ்சிச்சொலுமுரை யாண்மையும் வீம்பாமிடும்பற்றாய்
விரதங்களும் வேதங்களும் வீணாகநீ மறந்தாய்

அஞ்சும் மூடமாய்கண்ட பின்னுசைத் தொடர்பற்றுய்
ஆருந் திருக்கோயிற் சிவமதுவுங் கசப்பற்றுய்
தஞ்சம்மெனு ஞானக் கடன்மூழ்குந் திறமாகித்
தாள்சேர்ந்தனை குறைவேதினி சலியா திருமனமே ()

நாசி நுனைநடுவே திருக்கூத் தாகியநட்பி
ஞானக்கனி நாளும்மதை நாடிச் செயல்கண்டு
சிசியெனுமுரை யற்றனை சீரற்றனை யுயிர்கள்
செய்யும் பலனினை வற்றனைதே கத்துடன்கூடக்
கூசிக் குலவரவற்றனை கோளற்றனை பாலக்
குடியற்றனை நலமுற்றனை குடியேறினை மேலாங்
காசிப்புனல் தனின்மூழ்கினை கரையேறிய காக்ஷிக்
கண்டாயரன் கொலுவாகிய சபைமேவினை மனமே.()

வெளிபெற்றிடு சொரூபப்பொருள் வெளியாகியவொளி
விளைவாகிய நாதத்தொனி விந்தின்செயல்கண்டு[யில்
களிபெற்றனை தயவுற்றனை பிறவிக் கடலென்னுங்
கனையற்றனை யுலகத்தினில் வரவற்றனை காணு
வொளிபெற்றனை மயலற்றனை யொழிவற்றனை யோது
முறையற்றனை களிபெற்றனை பசியற்றனை யூறல்
குளிபெற்றனை யானுற்றிடு கொலுவுற்றனை கோமான்
கொடைபெற்றனை யறிவுற்றனை கோளற்றனை மனமே

பந்தோடிருகலையாகிய பனிரண்டினி னுலும்
பாழ்போகிட மீண்டே வரும்பதியின் தலைகாலும்
பெற்றேடிவந் திங்கேறிய பேர்மைந்தனைக் கண்டு
பேசுங்கலையோ டும்முறவாகிப் பிணக்கற்றுய்
கற்றேருடன் கற்றேமெனும் விஸ்தாரமு மற்றுய்
கானற்புன லோகப்பிடி மானத்தையு மற்றுய்
சித்தோடிரு சித்தாகிய சிற்றம்பல மீதே
சேர்ந்தாய்குறை தீர்ந்தாயினி வாழ்ந்தே யிருமனமே.

அல்லற்படுமோ ரொன்பது வாசற்பெரு வாசல்
ஆரும்மறிவார்க ளறியார்கள் ளொரு வாசல்
சொல்லப் படுதில்லைச் சிறுவாசற் படிமீதே
சூழும்பல காணுதிகள் வாழும் மணிவாசல்
தில்லைப்பதி யருகே யடையாளம் மெனலாகுஞ்
சேருங்கனி காணும்பசி தீரும் பரத்தோடுஞ்
செல்லப்படு மல்லற்பல நூல்கற் றதினுலே
சின்னஞ்சிறுவா சற்படியாமோ சொலுமனமே. (6)

விண்டும் மொருவர்க்கும் முரையாடப் பொருள்தானும்
பீசாக்ஷர வீதித்தெருக் கோடிமுடிந் திடத்தைக்
கண்டும் மிருந்தார்க்குள் ளிருகண்ணும் மிருகாலாற்
காணும் மதுதானும் பனிரண்டங்குலம் பாயும்

பிண்டம் புகுமண்டம் புகுமெங்கும் விளையாடிப்
பீடம்மெனுநிலைசேர்ந்திடு பெருமைதனைக் காண்பா
என்றும் மொழியற்றார் பரத்தோடும் முறவாக்கி
யேதும் முரையாமல் விருப்பார்கள் எறிமநமே. (7)

முப்பாழ்கடந் தப்பாலொரு முகப்புண்டதி னடுவே
முச்சந்திகள் கூடும்மது தானும் முதற்பாழாம்
அப்பாழ்கடந் தப்பாலொரு கணவாயதின் பெருமை
யறுகுநனியிடமும் வெனவறியார் பெரியோர்கள்
செப்பாதது நாணுமறிந் தப்பாற் கடந்திட்டாற்
சேருங் கலைநாலும் வருதிசையும் மறிந்திட்டால்
ஒப்பாரினி யிப்பாரினி லொப்பாருமேயில்லை
யொன்றைப்பிடி தன்மைப்படி மென்னப்படு மநமே

நாதம்மெழுந் தெழுந்தோடிவந்துறையுந் திருக்கூத்து
ஞானக் கனிநுலும் மதைநாடிச் செயல்கண்டு
பூதம்மெனும் பயமற்றனை பொறியற்றனை மெய்யிற்
பூசும் பரிமளமற்றனை பூவற்றனை லோகஞ்
சூதம்மென வரவற்றனை கசியற்றனை யெச்சிற்
சுத்தஞ்செயு நினைவற்றனை சுனவற்றினை ஞானப்
பாதம்முடிமேல் வைத்தனை பற்றற்றனை யுற்றுப்
பதிபெற்றனை யிகலற்றனை பதையாதிரு மநமே (9)

ஆயும்பல நூல்சாத்திர வேதம்மொடு புராணமாய்
வந்திடு வழிகண்டறி யார்கள் ளதுதானும்
பாயுங்கலைப னிரண்டினி லுண்டாகிய பருவம்
பாரும் மறியாதுப் பனிரண்டின் செயல்கண்டு
நாயின்கடை கெட்டாய் வழிபாடும் முதற்பெற்றாய்
நாள்கோள்பலவற்றாய்கொலைகள்வொன்றையுமற்றாய்
வாயும்வலதற்றாயுயிர் வீடும் நெறியற்னும்
மண்ணின் வரவற்றாயினி பொன்னம்பலம் மநமே. (

தலையாகிய பிறவிக்கட லலையாம லுழன்றேன்
கற்கும்பல சமையங்களுந் தர்க்கங்களும் விட்டேன்
நிலையாகிய பொருள்செல்வமு நினைவும்பிறர்க்கிட்டேன்
நித்தஞ்செயு நியமங்களு நேமங்களு மறந்தேன்
தொலையாத வுறக்கத்தோடு சுகதுக்கமு மற்றேன்
துணையாகிய ஞானக்கடன் மூழ்குந் துறைகண்டேன்
அலையாமலே யிருக்கும் மனமதிலே குடிகொண்டேன்
ஆனந்தம்வெளி கண்டுமகிழ்ந்துபின்னானென் றறியே
[னே

உருவானது விந்தின் பெயர்குருவானது ஞானம்
உடலுக் குயிரீசாதிக ளொருநான்குள முதலுங்

குருவானது முனைமீதினி லணுவாகிய வெளியிற்
குடியாகிய பதிகண் டவனருள் வாதவூராளி
ஒருவாசகந் திருவாசகம் புவிமீதினின் மகிழ்ந்தே [றோர்
யுரைசெய்தனர் தமிழ்த்தாழிசை நெறியின்படி நின்
கருவாசலி லணுகாமலே பிறவாநெறி பெறுவர்
கடவுட்செய லறியாதவர் கருவாசலிற் புகுவார். (12)

திருச்சிற்றம்பலம்.

திருஞானத்தாழிசை.

முற்றிற்று.

அனுமந்த பராக்கிரமம்.

இதுகாறும் தமிழிலில்லாத இவ்வரிய நூலில் ஆரிய பாஷையினின்றும் எடுத்து எழுதப்பட்டது.

இது ஆஞ்சனேயரியற்றிய அதிசயமான பராக்கிரமங்களை சத்திய பத்தியரூபமாக வேதாகம புராணேதிகாசாதி அரிய பெரிய உதாரணங்களுடன் விளக்கமாக எழுதப்பெற்றது அன்றியும் ஆஞ்சனேயர் மந்திரம், ஆஞ்சனேயர் யந்திரம், ஆஞ்சனேயர் பூஜாவிதான முதலிய உபாஸனுக்கிரகங்களை மலையாளம், இந்துஸ்தான் முதலிய தேசம் வரையிலும் மந்திரம், மஹோத்தி பிரபஞ்சசாரம் சாஸ்திர திலக முதலிய மந்திர சாஸ்திர ஆதாரத்துடன் அனைவருக்கும் பயன்படும் வண்ணம் அழகிய 41 படங்களுடன் கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 1 8 0

எமது விலாசம் :—

சிவநேசன் அண்டு கோ.,
35, பாரீஸ் வெங்கடாசல அப்பர் தெருவு,
மண்ணடி, சென்னை.